## தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு தலைவர் மு.க.ஸ்டாலினின் கடும் உழைப்பே காரணம்!

# ‘கலைஞர்’ என்ற பெயர் ஒரு சரித்திரம்; எதிர்காலத்திற்கான வழிகாட்டுதல்!

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!

சென்னை, ஜூன். 13-

**“தமிழ்நாட்டில் காணப்படுகின்ற பசுமைக்கு - சாலைகளுக்கு தலைவர் ஸ்டாலின் அவர்களின் உழைப்பே காரணம்” என்றும் “கலைஞர் என்ற பெயர் ஒரு சரித்திரம்; எதிர்காலத்திற்கான வழிகாட்டுதல் என்றும் - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம் சூட்டினார்.**

செயல் புயல் சகோதரர் சேகர்பாபு அவர்கள் உங்களைக் கரவொலி செய்யச்சொன்னார், நீங்களும் கரவொலி செய்தீர்கள். அது அவருக்குப் போதவில்லை; மீண்டும் மீண்டும் “இன்னும் இன்னும்” என்று உங்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்தக் கட்டடத்தின் செங்கல் பிதுங்குகிற அளவிற்கு நீங்கள் கரவொலி செய்தீர்கள். அந்தக் கரவொலி எல்லாம் எனக்கு வந்ததாக எண்ணிக்கொண்டால், நான் தமிழ் அறியாதவன் என்று பொருள்! மண்ணில் சிந்துகிற மழை எல்லாம் தாவரங்களுக்குச் சொந்தமில்லை, மண்ணுக்குச் சொந்தம்; உங்கள் கரவொலி எல்லாம் கவிஞனுக்குச் சொந்தமில்லை, கலைஞருக்குச் சொந்தம்! உங்கள் கரவொலி எல்லாம் கலைஞரின் புகழ் பாடுகின்ற ஒலிகள்; கலைஞரை வாழ்த்துகின்ற கர ஒலிகள்! உங்களுடைய ஒலிகள், தமிழ் மொழியின் ஒலியை உயர்த்திப் பிடிக்கிற ஆணைகள் என்று நான் கருதிக்கொள்கிறேன்.

சேகர்பாபு அவர்களே... உங்களை நான் எப்படி எடை போடுவது என்றே எனக்குத் தெரியவில்லை. இதோ ஓர் இடைவேளைக்குப் பிறகு நாங்கள் உள்ளே வருகிறோம்; அதே வெளிச்சம் மாறவில்லை; அதே ‘வாழ்க’ குரல்கள் ஓயவில்லை; அதே கரவொலி தேயவில்லை; அதே உற்சாகம் குறையவில்லை; அதே எழுச்சி மறையவில்லை! இது சேகர்பாபு செய்கிற, இயக்கத்துக்காகச் செய்கிற பெரிய மாயம் என்று நினைக்கிறது.

### தோல்வி என்பது புடம் போடும் தங்கம்!

தோல்வி என்ன செய்யும்? தோல்வி என்பது மனிதனுக்கு வந்தாக வேண்டிய ஒரு விஞ்ஞான அனுபவம். ஆனால், தோல்வியைப் புரிந்து கொள்கிறவன் ஞானி, துவண்டு போகிறவன் அறிவிலி. தோல்வியைப் புரிந்து கொள்கிற ஞானிகளாக நாம் இருப்போம்.

கழுத்தில் தங்கம் இருக்கிறது; கழுத்தில் இருந்தாலும், அது கழற்றி வைக்கப்பட்டாலும் தங்கம் தங்கம்தான்! பதவியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் சேகர்பாபுவின் செயல் சேகர்பாபு! கழுத்திலிருந்து கழற்றப்பட்ட தங்கம் அடகுக்குப் போகிறது என்று கருதினால் அது பிழை; கழுத்திலிருந்து கழற்றப்பட்ட தங்கம் அடகுக்குப் போகவில்லை, புடம் போடப் போகிறது! இன்னும் மெருகு கூடி, இன்னும் ஒளி கூடி வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நண்பர்களே... நான் எண்ணி 20 முதல் 22 நிமிடங்கள் உங்களோடு உரையாற்ற வேண்டும் என்று விரும்பி வந்திருக்கிறேன். இந்த 22 நிமிடங்களும் உங்கள் கண்களும் என் கண்களும் ஒரே புள்ளியில் சந்தித்துக் கொள்ளட்டும்; உங்கள் இதயமும் என் உதடும் அருகருகே இருக்கட்டும்; உங்கள் செவிகள் என்னுடைய ஒலியோடு கலந்திருக்கட்டும்; உங்கள் கைத்தொலைபேசிகள் மூடப்பட்டிருக்கட்டும், காதுகள் திறந்திருக்கட்டும். உங்களோடு மனம் விட்டுச் சில செய்திகளை உரையாட வேண்டும் என்று விரும்புகிறேன்.

### ‘கலைஞர்’ என்ற சொல்லின் காந்தசக்தி!

நண்பர்களே... ‘கலை’ என்ற சொல் தமிழில் மிகப்பழையது; ‘கலைஞன்’ என்ற சொல் தமிழில் மிகப்பழையது. அதுவே ‘அன்’ விகுதி அல்லாமல் ‘அர்’ விகுதி போட்டு ‘கலைஞர்’ என்று சொன்னாலும், அந்தச் சொல் ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழில், தமிழ் நெடுங்கணக்கில் கையாளப்பட்டு வந்த சொல். இந்த பழைய சொல்லுக்கு 20-ஆம் நூற்றாண்டில் ஒரு புத்தம் புதிய மின்சாரத்தைப் பாய்ச்சியவர் கலைஞர்! அதுவரைக்கும் இல்லாத பொருள், அதுவரைக்கும் இல்லாத வேகம், அதுவரைக்கும் இல்லாத உயரம், அதுவரைக்கும் ஆளப்பட்டிராத சொற்கோவை... ‘கலைஞர்’ என்ற தனிமனிதனால் அந்தச் சொல்லுக்குப் பெருமை உண்டானது.

‘கலை’ என்று சொல்லிப் பாருங்கள்... அதில் பெரிய எழுச்சி இல்லை; ஒரு பொருள் அவ்வளவுதான். ‘கலைஞர்’ என்று சொல்லிப் பாருங்கள் - நாதசுரக் கலைஞர், இசைப்பாட்டுக் கலைஞர், வாய்ப்பாட்டுக் கலைஞர், கல் கலைஞர், சொல் கலைஞர் என்று கலைக் கலைஞர் என்பது பொதுச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், ‘கலைஞர்’ என்றால் திருக்குவளையில் முத்துவேலருக்கு மகனாகப் பிறந்த மு. கருணாநிதி என்ற ஒருவரை மட்டும்தான் குறிக்கும் என்று தமிழ்நாடு பொருள் கொள்ளப்பட்ட பிறகு, அந்தச் சொல்லுக்கு வந்த அடர்த்தி, ஆண்மை, பொருள், செறிவு, திட்பம், நுட்பம் எல்லாம் அதிகம்!

இன்று கலைஞரின் 103-ஆவது பிறந்தநாளைச் சேகர்பாபு அவர்கள் இந்த மன்றத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். நீங்கள் எல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், கலைஞருக்குப் புகழ் சேர்க்க வந்திருக்கி றோம் என்று; அப்படி நினைத்தால் அது ஒரு மனப்பிழை என்று நான் கருதுகிறேன். கலைஞருக்குப் புகழ் சேர்ப்பதற்காக இந்த விழா இங்கு நிகழவில்லை; நமக்கு நாமே அவர் பெயரைச் சொல்லி எழுச்சியூட்டிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம் என்பதுதான் உண்மை. அவர் பெயர் ஒரு வெற்றி; அவர் பெயர் ஒரு சரித்திரம்; அவர் பெயர் ஓர் ஆறுதல்; அவர் பெயர் ஒரு வியூகம்; அவர் பெயர் எதிர்காலத் திற்கான வழிகாட்டுதல் என்று கருதிக்கொண்டால், அவரை நீங்கள் புரிந்து கொள்வது இந்த நேரத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

### ரப்பர் மரத்தின் ரணங்களும் தமிழ்ச் சாதியின் நன்றியும்!

**இந்த இயக்கம் காணாத தோல்வியா? இயக்கத் தலைவர்கள் காணாத பின்னடைவா? இல்லை. என் நண்பன் ஒருவன் நன்றாகச் சொன்னான், “ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல”. ரப்பர் மரத்தினுடைய குணமே அது அறிவாளால் கீறப்படுவதுதான், வெட்டப்படுவதுதான்; வெட்டுகிற பள்ளத்திலிருந்து ரப்பர் பால் வழிந்து வந்து பாத்திரத்தில் நிறையும். ரப்பர் மரத்தை வெட்டினால் தான் ரப்பர் பால்; அந்த ரப்பர் பால்தான் நாம் பயன்படுத்துகிற பொருள்களுடைய கச்சாப் பொருள். எனவே, ரப்பர் மரம் இந்த இயக்கம்; ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல, அது இருந்தால் தான் அது பால் வடிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.**

நண்பர்களே... இந்த நேரத்தில் என்னுடைய ஆதங்கம் ஒன்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். தி.மு.க. கூடத் தோற்கலாம், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தோற்றிருக்கக் கூடாது! நிலா தேயலாம், வானம் தேய்ந்துவிடக் கூடாது; காற்றில் ஈரப்பதம் குறையலாம், கடலில் ஈரப்பதம் குறைந்திருக்கக் கூடாது! இதுதான் என்னுடைய ஆதங்கம்.

**“நன்மை செய்து தீமை வாங்கும் இதயம் கேட்பேன்” என்று கண்ணதாசன் ஒரு பாடலில் எழுதியிருக்கிறார். அந்த இதயம் எதைக் கேட்கிறது? ஓர் இதயத்தைக் கேட்கிறது; அது எதைத் தாங்குகிற இதயம்? தீமையைத் தாங்குகிற இதயம். தீமை செய்து தீமை தாங்குகிற இதயத்தைக் கவிஞன் கேட்கவில்லை; நன்மை செய்து தீமை வாங்குகிற இதயத்தைக் கவிஞன் கேட்கிறான். நன்மை செய்தார், தமிழ்நாட்டுக்கு நன்மை செய்தார், தொண்டு செய்தார், இரவு பகலாக உழைத்தார்; கொளத்தூர் தொகுதியை, இது தமிழ்நாட்டின் ஒரு தொகுதியா, சிங்கப்பூரின் ஒரு பகுதியா என்று கேட்கும் அளவிற்கு மாற்றி வைத்தார். அவர் தோற்கடிக்கப்பட்டார் என்றால், தமிழச் சாதியின் நன்றி உணர்ச்சியின் மீது நமக்கெல்லாம் சந்தேகம் வருகிறது.**

நண்பர்களே... அந்தத் தோல்வி ஒரு தோல்வி அல்ல; மே நான்கு ஒரு நாள் மட்டும்தான் தளபதி ஸ்டாலின் தோற்றிருக்கிறார், அந்தத் தொகுதி மக்கள் 365 நாளும் தோற்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! நான் தளபதி ஸ்டாலினுக்காக வருந்துவதை விட, அந்தத் தொகுதி மக்களுக்காக அதிகம் வருந்துகிறேன்.



ஆனாலும் அந்தத் தொகுதி மக்கள் தமிழர்கள் என்பதனாலும், தமிழ்நாட்டு எல்லைக்குள் குடியிருக்கிற வாக்காளர்கள் என்பதனாலும், தமிழ்நாட்டின் சகல உரிமைகளையும் அனுபவிக்க உரிமை பெற்றவர்கள் என்பதனாலும், அவர்கள் அப்படி வாடிவிடக்கூடாது என்று ஒரு கவிஞனாக, எழுத்தாளனாக, சக குடிமகனாக அந்த மக்கள் துன்பப்படக்கூடாது என்றும் நான் விரும்புகிறேன் தோழர்களே...

### 50 ஆண்டுகாலப் பயணமும் தமிழ் மீதுள்ள காதலும்!

ஓர் உண்மையைச் சொல்லட்டுமா உங்களுக்கு? இதுதான் மிகப்பெரிய உண்மை. நான் 50 ஆண்டுகளாக இந்த இயக்கத்தோடு உங்களுக்கு இருக்கிறேன். இந்த இயக்கத்தோடு இருப்பது எதற்காக என்று உங்களில் யாராவது நினைத்துப் பார்த்தீர்களா? நான் உள்ளே வருகிறபோது எனக்குக் கிடைத்த அன்புதான், நான் சம்பாதித்திருக்கிற மிகப்பெரிய தமிழ்ச் சொத்து என்று நினைக்கிறேன். என் மீது உங்களுக்கு எவ்வளவு பெரிய ஆசை, எவ்வளவு பெரிய அன்பு, நம்பிக்கை!

ஒன்றே ஒன்று சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்; இந்த இயக்கத்தில் 50 ஆண்டுகளாக நான் உடன் இருக்கிறேன். வெற்றியிலும் தோல்வியிலும் பக்கத்தில் இருக்கிறேன்; கழுத்திற்கு மாலை வந்தாலும், கழுத்திற்குக் கத்தி வந்தாலும் அருகில் இருந்து நான் காக்க முயன்றிருக்கிறேன் அல்லது தோளுக்கு மாலையை நான் மதித்திருக்கிறேன். பதவிக்காகவா, பணத்துக்காகவா, மந்திரி பதவிக் காகவா, சட்டமன்ற உறுப்பின ருக்காகவா, ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்காகவா? இவை யெல்லாம் எனக்குச் சரியாக வராது என்று தெரிந்தவன் நான்!

நான் மிகவும் மதிப்பது எனது சுதந்திரத்தைத்தான். என் சுதந்திரத்தின் கழுத்திற்குக் கத்தி வைக்கிற எதையும் நான் ஆராதிப்பதில்லை; தமிழ் எனக்குக் கொடுத்த சுதந்திரத்தை மட்டும்தான் நான் பெருஞ்செல்வமாகக் கருதுகிறேன். ஆனாலும் கலைஞர் என்றால் எனக்குக் காதல், தளபதி என்றால் ஓர் அன்பு, உதயநிதி என்றால் ஒரு பாசம், சேகர்பாபு என்றால் ஒரு நம்பிக்கை!

“பிறகு ஏன் இந்த இயக்கத்தோடு பயணிக்கிறாய்?” என்று கேட்பீர்கள். உங்களுக்கெல்லாம் ... 16 ஒளிப்பதிவுக் கருவிகள் இந்தக் கூடத்தில் இருக்கின்றன, எனக்குத் தெரியும். ஒவ்வொரு ஒளிப்பதிவுக் கருவிக்கும் பின்னால் பத்தாயிரம் மக்கள் இருப்பார்கள் என்பதை நான் உணர முடிகிறது. ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேர் இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது ஒரு நாற்பதாயிரம் பேர் இந்த நிகழ்ச்சியைக் கண்ணுற்றும் செவியுற்றும் கொண்டிருக்கலாம்; இன்னும் பல பேர் அதைக் காணலாம். இதன் வழியாகத் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

“பிறகு ஏன் இந்த இயக்கத்தோடு உனக்கு நெருக்கம்?” என்று கேட்டால், என் இதயம் சொல்லுகிற ஒரே பதில், தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் தியாகம் செய்த இயக்கமும், இன்னும் தியாகம் செய்யக்கூடிய உறுதி வாய்ந்த இயக்கமும், எனக்கு நம்பிக்கை தருகிற இயக்கமும், இருக்கிற இயக்கங்களில் பலமும் வளமும் வாய்ந்ததான இயக்கமும், இன்னும் நூறாண்டு களுக்குப் பயணிக்கக்கூடிய இயக்கமும் இதுதான் என்ற நம்பிக்கையோடு நான் என் தமிழை அழைத்துக் கொண்டு இவர்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறேன்!

நான் நேசிக்கிற தமிழ் உங்களிடமும் இருக்கிறது; உங்களிடம் உள்ள தமிழை நானும் நேசிக்கிறேன். ஒடுக்கப்பட்ட பகுதியில் இருந்து வந்தவன் நான்; ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் இயக்கம் காட்டுகிற உறுதியும் அன்பும் என்னையே மீட்டெடுப்பதாகத் தோன்றுகிறது என்று நான் உறுதிப்படுகிறேன். பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும், அதன் வழியே இன்று இருக்கிற தளபதியும் பாடுபட்டுக் கொண்டிருக்கிற இந்த இயக்கம், தமிழுக்கு இன்னும் நம்பிக்கை உள்ள இயக்கம், தமிழர்களுக்கு இன்னும் நம்பிக்கை உள்ள இயக்கம் என்ற உறுதியான வேர்வையில் நான் பாடிக்கொண்டிருக்கிறேன் நண்பர்களே!

### தலைவனின் மாண்பும் ஜப்பானிய உவமையும்!

நண்பர்களே... தோல்வியை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்கிறீர்களோ, அதில் இருக்கிறது உங்கள் மேன்மை; அதில் இருக்கிறது உங்களுடைய எதிர்காலத்தின் நன்மை. காதலியின் பெருமை பிரிவில் தெரியும், தாயின் பெருமை அவள் மறைவில் தெரியும், நண்பனின் பெருமை வறுமையில் தெரியும், ஒரு தலைவனின் பெருமை தோல்வியில்தான் தெரியும்! வெற்றி என்பது உங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கு; தோல்வி என்பது ஒரு தலைவன் மட்டும் தாங்கிக் கொள்வதற்கு. எது பெரியது? உங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிற வெற்றியை விட, “தனி ஒரு தலைவன் நானே தாங்கிக் கொள்கிறேன்” என்று சொல்வதுதான் ஒரு தலைவனின் மாண்பு!

செயற்குழு கூட்டத்தில் தளபதி ஸ்டாலின் பேசிய பேச்சு என் இதயத்தில் ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. அவர் சொன்னார், “யாரும் யாரையும் குறை சொல்லாதீர்கள்; தோல்விக்குக் காரணம் யார் என்று யாரையும் விரல் சூட்டாதீர்கள், தோல்வியின் முழுப் பொறுப்பையும் நான் ஒருவன் மட்டுமே ஏற்றுக் கொள்கிறேன்” என்று சொன்ன திராணி, என்று சொன்ன அருமை அவருக்கல்லவா தெரியும்!

நண்பர்களே... ஓர் உண்மையைச் சொல்லுகிறேன், இந்தத் தோல்விக்குச் பிறகு நாம் காலத்தைப் புடம் போட வேண்டும். இயக்கத்தை இந்தத் தோல்விக்குச் பிறகு நாம் செம்மை யுறுத்த வேண்டும்; என்ன நிகழ்ந்தது என்பதை நமக்கு நாமே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நான் ஒன்றே ஒன்றைச் சொல்லிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்; நான் எளியவன், அரசியல் அறியாதவன், உங்களோடு பயணிக்க வாய்ப்பற்றவன் அல்லது தகுதி கூட இல்லாதவன். ஆனாலும் நான் சொல்கிறேன், இந்தத் தோல்விக்குக் காரணமான ஆட்கள் என்று நீங்கள் கருதுகிற ஆட்கள் யார் மீதும் நடவடிக்கை எடுப்பதற்குரிய காலம் இது அல்ல; யார் மீதும் நடவடிக்கை எடுப்பதற்குரிய காலம் இது அல்ல என்று நான் சொல்வதற்கு காரணமே, எல்லார் மீதும் தவறு இருந்தால் யார் மீது நடவடிக்கை எடுப்பது? இது நம்மை நாமே தேற்றிக் கொள்ள வேண்டிய காலம்.

**ஜப்பானில் ஒரு கதையைச் சொல்வார்கள்... இந்தத் தோல்வியை நாம் உரமாக இட்டுக் கொள்ள வேண்டும். ஜப்பானிய எரிமலை வெடிக்கும்; எரிமலைக் குழம்புகள் விசிறிப் பரவும், பல ஊர்களை எல்லாம் அக்கினிக் குழம்பு நனைக்கும். எரிமலைக் குழம்பு வந்து விழுந்த கிராமத்து மக்கள் ஊரை விட்டு ஓடி விடுவார்கள். சில மாதங்கள் கழித்து ஊருக்குத் திரும்புவார்கள்; எரிமலைக் குழம்புகள் ஆறிக்கிடக்கும் சாம்பலாக. அந்தச் சாம்பலை அள்ளி நிலத்திலே விதைப்பார்கள்; அந்தச் சாம்பலைப் போன்ற உயர்ந்த உரம் உலகத்தில் இல்லை என்பதை ஜப்பானியன் அறிவான்! அந்தச் சாம்பலை நிலத்தில் விதைத்த பிறகு சாகுபடி செய்வான்; ஒரே ஒரு விளைச்சலில் மூன்று மடங்கு சாகுபடி காணக்கூடிய வலிமை அந்தச் சாம்பலுக்கு உண்டு. அந்தச் சாம்பல் தான் இந்தத் தோல்வி; அந்த விவசாயி தான் நீங்கள், அந்த விளைச்சல்தான் எதிர்காலத்தில் நீங்கள் காணப்போகிற வெற்றி என்று நீங்கள் கருதிக் கொள்ள வேண்டும்! இதுதான் மக்களை அதிகமாகச் சந்திக்கிற காலம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.**

### மக்களைச் சந்திக்கும் நேரமிது: கலைஞர் காட்டிய வழி!

கலைஞரைப் பற்றி ஒரு உறுதியான சம்பவத்தைப் பற்றி நான் சொல்லுகிறேன். எந்தவொரு சம்பவத்தையும் ஆதாரம் இல்லாமல் மேடையில் பேசுகிறவன் கோழை அல்லது பொய்யன்; எதையும் ஆதாரத்தோடு பேச வேண்டும் என்பது என்னுடைய பேச்சுக் கொள்கைகளுள் ஒன்று. இப்போது நான் சொல்லப்போகும் சம்பவத்திற்கு மிகப்பெரிய ஆதாரம் உண்டு; அந்த ஆதாரம் யார் என்றால் நான்தான், கண்கண்ட சாட்சி, சாட்சி செவியுற்ற சாட்சி நான்தான், பக்கத்தில் இருந்து பார்த்தவன் நான்தான்.

ஒரு முதலமைச்சராக இருக்கிறார் கலைஞர். ஒரு கூட்டம் முடிகிறது; அப்போது ஆலிவர் ரோட்டில் அவர் குடியிருந்தார். அமைச்சர்கள் கார்கள் பின் தொடர ஆலிவர் ரோடு இல்லத்திற்கு மாலை 5 மணிக்கு வருகிறார். அங்குச் சிறிது ஓய்வெடுத்துவிட்டுப் பெரியார் திடலுக்குச் செல்ல வேண்டும் என்பது அடுத்த நிகழ்வு; பெரியார் திடலில் ஆசிரியர்கள் மாநாடு.

அப்போது ஒரு தகவல் வருகிறது, ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது என்று. அப்போதெல்லாம் இ-மெயில் கிடையாது; ஃபேக்ஸ் எனப்படும் தொலைநகல் தான். அந்த ஃபேக்ஸ்-இல் செய்தி வருகிறது, ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது என்று. உடனே அந்த இடத்தின் மொத்த வானிலையும் மாறிவிட்டது; சொற்கள் மறைந்துவிட்டன, மகிழ்ச்சி உறைந்துவிட்டது. சற்றே வெளியே பார்த்தேன்; எந்தக் காரிலும் தேசியக் கொடி இல்லை, கட்சிக் கொடி பறக்கிறது. ஓர் அமைச்சர் சொல்கிறார், “வேண்டாம் அண்ணா, இந்த மக்களுக்கு இவ்வளவு பாடுபட்டு கடைசியில் என்ன கண்டீர்கள்? இந்தக் கூட்டத்திற்கு எல்லாம் போக வேண்டாம் அண்ணா, கொஞ்சம் டீ சாப்பிட்டு ஓய்வெடுங்கள் அண்ணா” என்று சொல்லுகிறார். பெயர் தெரியும்; ஆனால் இப்படிச் சொன்ன அமைச்சருக்குப் புகழ் வராது என்பதனால் அவர் பெயரை நான் இதயத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறேன்.

கலைஞர் சொன்னார், “என்னது? கூட்டத்திற்குப் போக வேண்டாமா? மக்களைச் சந்திக்க வேண்டிய நேரமே இதுதான், எடு வண்டியை!” கலைஞர் சொன்ன இந்தச் செய்தியைத்தான் இயக்கம் இன்று தன் இதயத்தில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மக்களைச் சந்திக்க வேண்டிய நேரம் இதுதான்!

### அமெரிக்க ஜனாதிபதியும் நம் தமிழ்நாட்டுத் தலைவரும்!

எப்போதும் மக்களைச் சந்தித்துக் கொண்டிருந்தவர் தளபதி ஸ்டாலின். எனக்கு அவரிடம் பிடித்த விஷயம் என்ன தெரியுமா? அவருடைய பணிகளுக்குக் கிழமை கிடையாது, தேதி மட்டும்தான் உண்டு! சனி, ஞாயிறு விடுமுறை என்று அவருக்குத் தெரியாது; “17 எங்கே? 18 எங்கே?” இப்படித்தான்.

நான் அமெரிக்க ஜனாதிபதியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; வெள்ளிக் கிழமை மாலை வார இறுதி வந்துவிட்டால், தன் கோட்டைக் கழற்றித் தூர எறிவார். ஜனாதிபதி பதவியையும் கோட்டோடு களைந்து விடுவார்; அரைக் கால் சட்டை போட்டுக் கொள்வார். “இன்னும் இரண்டு நாட்களுக்கு நான் அமெரிக்காவின் ஜனாதிபதி அல்ல; நான் ட்ரம்ப், என் நாய்க்குட்டியோடு பேசுவேன், என் புல்வெளியில் விளையாடுவேன், என் பேரன்-பேத்திகளோடு கால் பந்து விளையாடுவேன், மீன் இல்லாத குளத்தில் மீன் பிடிப்பேன், கடலுக்குப் போவேன், படகு ஓட்டுவேன், எனக்குப் பிடித்த சாண்ட்விச் சாப்பிடுவேன், இன்றைக்கு மட்டும் சர்க்கரை போட்டுத் தேநீர் அருந்துவேன், இரவு 10 மணி வரைக்கும் நான் விழித்திருப்பேன், விடிய விடியப் படம் பார்ப்பேன்; எந்த அலுவலகத் தொலைபேசியும் என் காதுக்கு வந்துவிடக் கூடாது, இரண்டு நாட்களுக்கு என் செல்போன் ஊமையாக இருக்கும்; நான் நானாக இருப்பதற்கு இந்தச் சனி, ஞாயிறைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்” என்று உலகத்தின் வல்லரசாகிய அமெரிக்காவின் ஜனாதிபதி எடுக்கிற முடிவு அது!

ஆனால், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஸ்டாலின் 24 மணி நேரமும் உழைத்தாரே தவிர, இப்படி ஓய்வெடுக்கவில்லை; அந்த உழைப்புதான் அவர் இன்னும் உங்களைக் கைதட்ட வைத்துக் கொண்டிருக்கிறது! இன்னும் தமிழ்நாட்டில் காணப்படுகிற பசுமைக்கு, சாலைகளுக்கு அவர் உழைப்புதான் காரணம்; இன்னும் மகிழ்கிற மகிழ்ச்சிக்கு அவர் உழைப்புதான் காரணம்.

### அண்ணாவின் வரலாறு காட்டும் எதிர்கால வெற்றி!

ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி நான் விடைபெற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். தோல்விகளைத் தளபதி ஸ்டாலின் அவர்கள் ஒரு நேர்மறையாக எடுத்துக்கொண்டால், இந்த இயக்கத்திற்குப் பெரிய பெரிய வெளிச்சம் இருப்பதாக எங்களைப் போன்றவர்கள் நம்புகிறோம். தோல்வியில் நீங்கள் அண்ணாவிற்கு இணையாக நிற்கிறீர்கள்; கலைஞர் தோல்வியடைந்ததே இல்லை, கலைஞர் ஆட்சியில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார், தேர்தலில் அவரை யாராலும் தோற்கடிக்க முடியவில்லை, அவர் தோல்வியைச் சந்தித்தறியாதவர்!

அண்ணா தோல்வியைச் சந்தித்திருக்கிறார். சுப. வீரபாண்டியன் அழகான வரலாற்றுச் செய்திகளை எல்லாம் தொகுத்துச் சொன்னார்; அவர் வரலாறு படித்தவர். தமிழச்சி தங்கப்பாண்டியன் வரலாறு படித்தவர்; இந்த இயக்கத்தின் வேர்களையும் விழுதுகளையும் தெரிந்து கொண்டு பொது வாழ்க்கைக்கு வந்தவர்கள் இந்த இருவரும். வீரபாண்டியனுக்குத் தெரிந்த ஒரு தகவலை நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

1962-இல் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்கிறது; 50 சட்டமன்ற உறுப்பினர்களை வெல்கிறது. கலைஞர் உட்பட 50 சட்டமன்ற உறுப்பினர்கள்; அண்ணா மட்டும் தோற்றுப் போனார், காஞ்சிபுரத்தில் அண்ணா தோற்கடிக்கப்பட்டார். 50 சட்டமன்ற உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்குச் செல்லுகிறார்கள், அண்ணா வெளியே நிற்கிறார்; சோர்ந்து போகவில்லை அண்ணா, தளர்ந்து போகவில்லை, தன் புன்னகையை உதட்டிலிருந்து பிரித்தெடுத்துத் தெருவில் போட்டுவிடவில்லை, தன் உற்சாகத்தை இழந்துவிடவில்லை. அண்ணா வரலாறு படித்தவர்; சொன்னார், “கலங்காதீர் தம்பிமார்களே, ஒரு வரலாற்றுக் கதை சொல்கிறேன் உங்களுக்கு. ஐரோப்பாவில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரு பெரிய போர் நடந்தது. கிறிஸ்தவர்களுக்குத் தலைமை தாங்கியவன் ரிச்சர்ட்; இஸ்லாமியர்களுக்குத் தலைமை தாங்கியவன் சலாடின் என்னும் மன்னன். எதற்குத் தெரியுமா போர்? இயேசு பிறந்ததாகக் கருதப்படுகிற ஜெருசலேம் அன்றைக்கு இஸ்லாமியர்களின் கையில் இருந்தது. அந்த கிறிஸ்தவர்களின் தலைவன் ரிச்சர்ட் கேட்டான், ‘வேறொன்றும் வேண்டாம், ஜெருசலேத்திற்குள் நுழைந்து எங்களை அங்கே தரிசிக்க அனுமதியுங்கள்’ என்று கேட்டான். ‘இல்லை, இது எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது; ஒரு கிறிஸ்தவர் கூட ஜெருசலேம் நகரத்திற்குள் வர முடியாது, மோதிப்பார்’ என்றான் சலாடின். ரொம்பப் பெரிய சிக்கலுக்குப் பிறகு, போர் ஒரு முடிவுக்கு வந்தது. அந்த முடிவில், சலாடின் என்ற இஸ்லாமிய மன்னன் ஒரேயொரு நிபந்தனை விதித்தான், “இந்தப்போரில் ஈடுபட்ட அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஜெருசலேம் நகரத்திற்குள் வரலாம், தலைமை தாங்கிய ரிச்சர்டைத் தவிர; ரிச்சர்ட் மன்னன் மட்டும் உள்ளே வரக் கூடாது, போராடியவர்கள் எல்லாம் வரலாம்” என்றார்.

அண்ணா சொன்னார், “தம்பிமார்களே! எல்லோரையும் ஜெருசலேம் நகரத்திற்குள் அனுப்பி விட்டு ரிச்சர்ட் மட்டும் வெளியே நின்றது போன்று, 50 சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளே அனுப்பிவிட்டு உங்கள் தலைவன் நான் வெளியே நிற்கிறேன்” என்றார். அன்று அண்ணா வெளியே நின்றார், சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றம் சென்றார்கள்; இன்றைக்குத் தளபதி வெளியே நிற்கிறார், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளே சென்றார்கள். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அண்ணா முதலமைச்சர் ஆனார்; தளபதியும் ஆவார்!

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து உரையாற்றினார்.